சுமை தூக்கி

நான், ஒரு மாபெரும் நுகர்வோர் விநியோக நிறுவனத்தின் விற்பனைப் பிரிவின் மேலாளர். இந்தியாவில் நான் சென்றிராத நகரங்களே இல்லை என்னும் அளவுக்கு 15 ஆண்டுகளுக்கும் மேல் பிரயாணம் செய்திருக்கின்றேன்.

அதிகபட்சமாக ரயிலிலேயே பயணம் செய்திருக்கின்றேன். ஒவ்வொரு முறை ரயிலில் பயணம் செய்யும் போதும் குறைந்த அளவு பெட்டிகளையே எடுத்துச் செல்லும் பழக்கம் கொண்டிருந்தேன் நான். அதற்கு முக்கியக் காரணம் ஒன்று உண்டு. ரயில் நிற்பதற்கு முன்னரே வரிசையாக ஒவ்வொரு பெட்டிக்கும் ஐந்து அல்லது ஆறு பேர் பல வயதுகளில், பல குரல்களுடன் நாம் இறங்குவதற்கு முன்னமே நெருக்கியடித்துக் கொண்டு உள்ளே ஏறும் சிவப்பு நிற உடையணிந்து, கையில் பித்தளைக் காப்புடன், தலையில் துண்டுடன் முண்டியடித்து ஏறும் சுமைதூக்கிகள் தான் அந்தக் காரணம். பீடி வாசனையிலிருந்து வெற்றிலை வாசனை வரை குபீரெனத் தாக்கும் இவர்களால்.

அவர்களைத் தவிர்ப்பதற்காகவே எப்போதும் குறைந்த சுமைகளுடன் வருவது வழக்கம். அவர்களிடம் சுமை ஏதும் இல்லையப்பா என்று சொல்வதில் ஒரு சந்தோசம். ஒரு திருப்தி.

இந்த முறை அவர்களைத் தவிர்க்க முடியும் என்று தோன்றவில்லை. அதற்குக் காரணம் என் மனைவியுடன் வந்ததால், நான்கு பெட்டிகளுக்குச் சுமைகள் சேர்ந்து விட்டது. இத்தனைக்கும் ஒவ்வொரு பெட்டியிலும் உருளும் சக்கரங்கள் இருந்தது. அதனால் நான் கவலைப்படாமல் தான் வந்தேன். ஆனால் பாழாய்ப் போன இந்த ஹவுரா எக்ஸ்பிரஸ் எப்போதும் நிற்கும் 1 வது பிளாட்பாரத்தில் நிற்காமல் மூன்றாவது பிளாட்பாரத்தில் கொண்டு போய் நிறுத்தினான். எப்படியும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு படியேறி இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே தான் போர்ட்டரின் தயவு தேவைப்பட்டது.

எங்களுக்கென்று ஒரு போர்ட்டர் வந்து வாய்த்தான். எப்படியும் வயது 50 இருக்கும். 60 ரூபாய் வேண்டும் என்று கறாராய்க் கேட்டான். வேறு வழியின்றி ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. இதற்காகத் தான் பெட்டியைக் குறைத்துக் கொள் என்றேன் என்று மனைவியைத் திட்டினேன்! மூன்று பெட்டியைத் தலையில் தூக்கிக் கொண்டு ஒரு பெட்டியைக் கையில் தூக்கிக் கொண்டு அவன் அநாயசமாக நடக்க ஆரம்பித்தான். எனக்கோ அவசரம் அவன் பெட்டியோடு போய்விட்டால் என்ன செய்வது என்று. என் மனைவிக்கோ வேகமாய் நடக்க முடியவில்லை. அவளையும் இழுத்துக் கொண்டு கொஞ்சம் சீக்கிரமாக நடந்து சென்று அவன் வேகத்தை மட்டுப் படுத்த அவனுடன் பேசிக் கொண்டே நடக்க ஆரம்பித்தேன்.

அவனது சொந்த ஊர் இதே சென்னை என்றும் குழந்தைகள் இருவர் என்றும் நல்ல வேலையில் இருந்தாலும் விட்டு விலகிச் சென்று விட்டார்கள் என்பதையும் சொல்லக் கேட்டேன். மனைவியுடன் வசிப்பதாகவும் ஏதோ வயிற்றுக்கும் வாய்க்கும் சரியாக இருப்பதாய் புலம்ப ஆரம்பித்தான். சரி டீக்காசு என்று கூட ஒரு பத்து ரூபாய் வாங்குவதற்கு அடி போட ஆரம்பித்து விட்டான் என்று நினைத்துக் கொண்டேன்.

ரொம்ப நாள் கேள்வியாய் மனதில் நிற்கும் அந்தக் கேள்வியைக் கேட்டே விட்டேன். ஏன் இப்படி ரயில் நிற்கும் முன்னமே தொத்திக் கொள்கின்றீர்கள் என்று. "அதையேன் கேக்குற சார்? நாங்க 289 பேர் பதிவு பெற்ற போர்ட்டருங்க இங்க சென்னை செண்ட்ரல்ல. சரி போட்டி இருக்கும் காலையில இருந்து. வயசு வித்தியாசமெல்லாம் பார்க்க மாட்டானுங்க. அதிலும் இந்த வண்டி இவனுக்கு, இந்த பிளாட்பாரம் இவனுக்கு விட்டா இந்த போகி இவனுக்குன்னு பிரிச்சி

வைச்சிருப்பாங்க. மாறி வேறெதுலயாவது நுழைஞ்சிட்டா ஒரே ரணகளம் தான். சரி அவனுகளும் என்ன செய்வானுக? இது ஒன்னு தான் எங்களுக்குத் தெரிஞ்ச ஒரே தொழிலு. நாங்க என்ன ஒங்கள மாதிரி படிக்கவா செஞ்சோம்?"

அடுத்த கேள்வியையும் கேட்டு விட்டேன், "எப்பவுமே குறைவான பெட்டியைக் கொண்டு வர்றவங்களப் பத்தி என்ன நினைக்கிற?" பெட்டியையும் தூக்கிக் கொண்டு திரும்பி என்னை ஒரு மாதிரி பார்த்த அந்தப் போர்ட்டர், "அவங்களப் பத்தி நான் என்ன சொல்ல வேண்டியிருக்கு சார்? ஆயிரம் பேருக்கு மேல ஒரு வண்டியில் வர்றாங்க, எல்லாரும் அவங்க சுமையைத் தூக்கச் சொன்னா போர்ட்டருக்கு எங்கே போறது? எங்களுக்குன்னு உள்ள சுமைய யாரும் தடுக்க முடியாது தெரியுமுல்ல!" என்றான். எனக்கே ஆச்சரியமாய் இருந்தது! நாட்டில் உள்ள அனைவரும் நம் பொருளையே வாங்க நினைத்தால் நம்மால் உற்பத்தி செய்ய முடியுமா? என்று நினைத்து வியந்தேன்!

அதற்குள் ஆட்டோ நிற்குமிடம் வந்திருந்தது. அவனுடன் பேசியதில் ஏதோ ஒரு திருப்தி இருந்தது மனதில். நானாகவே 10 ரூபாய் சேர்த்து 70 ரூபாயாகக் கொடுத்தேன். பேசுன காசை விட அதிகமா வாங்குற பழக்கம் எப்பவும் இல்ல சார். உழைச்சுச் சாப்பிட்ற சாப்பாடு தான் என்னைக்கும் வயித்துல ஒட்டும். அது தான் சார் திரும்பத் திரும்ப உழைக்கவும் தூண்டும். அடுத்த வண்டி வர்ற டைம் ஆச்சு. இப்பவே போனாத் தான் அடுத்த ஆளப் புடிக்கலாம்" என்று துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நடக்க ஆரம்பித்த சுமை தூக்கி என்னையும் சேர்த்துத் தூக்கிச் செல்வது போல் இருந்தது!